ஸ்ரீ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சச.] சர்வஜித்து-ஞு சித்திரை-மீ [பகுதி—சு.

Vol. 44. April—May 1947. No. 6.

## வள்ளுவர்வாய்மொழி*

வித்துவான். பண்டிதர்.

திரு. கா. பொ. இரத்தினம்அவர்கள் B.A. (Hons.) B.O.L.,

விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரியகலாசாலை, கொழும்பு.

திருவள்ளுவரையும் அவருடைய அருமறையாகிய திருக்குறளையும்பற்றிக் கேள்வியளவிலேனும் அறியாதவர்கள் தமிழர்களாக இருக்கமுடியாது; ஏன்? தமிழுக்கும் தமிழ்மக்களுக்கும் என்றும் அழியாப் பெரும்புகழை ஈட்டிக்கொடுத்த பெரியார் திருவள்ளுவரேயாதலின். தமிழ்மக்கள் மாத்திரமன்றி உலகம் முழுதுமே அவருடைய தமிழ்மறையைப் போற்றுகின்றது. ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய மேலைத்தேசமொழிகள் பலவற்றிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த மொழிபெயர்ப்புக்கள்வாயிலாகத் திருக்குறளைப் படித்தறிந்துவிட்டுப் பிறநாட்டுமக்கள் திருவள்ளுவரைப் பாராட்டுகிறார்கள் எனில் தமிழ்மக்களாகிய நாம் அவருக்குச் செய்யத்தக்க கைம்மாறொன்று உண்டா? திருக்குறளின் உலகப்பிரசித்தியைக்கண்டு இன்பவெள்ளத்திலே படிந்த பாரதியார்,

"வள்ளுவன் றன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

* 6—3—47-இல் கொழும்பு வானொலிநிலையத்திற் பேசியதைத்தழுவி யெழுதியது.

என்று பாடிப் பரவசமடைந்தார். "திருவள்ளுவர் தமிழ்நாட்டுக்கு மாத்திரம் உரியவரல்லர்; அவர் ஓர் உலககவி. அவருடைய திருக்குறள் உலகம் முழுவதற்கும் உரிய பொதுமறை" எனக் கூறலே பொருத்தமானது.

இவ்வாறு திருவள்ளுவரும் அவருடைய தெய்வக்குறளும் விளங்குவதன் காரணம் யாது? இரண்டாயிரம்வருடங்களுக்கு முன் எழுந்ததாயினும் அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்குமே பொருத்தமானகருத்துக்களை — உயிர்க்கு உறுதிபயக்கும் உயர்ந்த கருத்துக்களை—க்கொண்டு அது விளங்குவதேயாகும். உண்மை என்றும் ஒரேதன்மையானது. சாதாரணமக்கள் பல காரணங்களால் அதனைக் காணமுடியாது மயங்குவர். ஞானிகள் மாத்திரம் அதன் முழுத்தோற்றத்தையும் உள்ளவாறே கண்டு அதில் ஈடுபட்டு அதன்மயமாகுவர். இந்த ஞானிகளுள் தெய்வப் புலமை மிக்கவரே அதனைப் பிறரும் ஏற்றுக்கொள்ளத்தக்கமுறையில் எடுத்துரைக்கத்தக்கவர். இம்முறையில் சொன்னயம் பொருணயங்களுடன், சிந்தைக்கும் செவிக்கும் இன்பம்பயக்கத்தக்கதாகவும் மக்களுடைய உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதியத்தக்கதாகவும் உண்மையைப் பல துறைகளாலும் வெளிப்படுத்தும் தெய்வநூலே திருக்குறளாகும் என்க. இதனாலேயே இதனை அறிஞர்களும் புலவர்களும் 'பொய்யாமொழி', 'பொதுமறை', 'தமிழ்வேதம்', 'பொருளுரை' எனப் பலவாறு கூறிப் போற்றினர்கள். இதன் ஆசிரியரையும் 'தெய்வப்புலவர்', 'பொய்யில்புலவர்', 'தேவர்', 'பெருநாவலர்' எனப் பலவிதமாகப் பாராட்டினார்கள்.

இத்தகைய திருக்குறளில் என்ன கூறப்படுகிறது? எனும் வினவுக்கு என்ன கூறப்படவில்லை? எனும் வினவே பொருத்தமான விடையளிக்கிறது. ஏனெனில் எல்லாப் பொருள்களும் இதில் உள; இல்லாத பொருள் ஒன்றும் இல்லையாதலின் என்க. திருக்குறளின் சிறப்பையும் தலைமையையும் நன்கு புலப்படுத்தத்தக்க பல கதைகள் தமிழ்நாட்டில் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்று ஈண்டுப் பொருத்தமானது. சென்னை அரசினர் திராவிடமொழிகள் ஒவ்வொன்றிலுமுள்ள சிறந்த ஒரு நூலை அச்சிட்டு வெளிப்படுத்த

எண்ணினர். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளிற்றேர்ந்த புலவர்களைத் தனித்தனி அழைத்துச் சிறந்த ஒருநூலைக் கூறும்படி கேட்டனர். அவ்வாறழைக்கப்பட்ட தமிழ்ப் புலவர் ஒருவர் திருக்குறளே சிறந்த தமிழ்நூல் என்று கூறினர். உடனே காரணம் யாது? எனும் வினு எழுந்தது. 'எல்லாப் பொருளும் இதில் உள' எனப் புலவர் விடையிறுத்தார். "இவ்வாறு தலைகால்தெரியாமற் புகழ்வது கர்நாடகப்புலவர்மாபென்றெண்ணிக்கொண்டு, 'கல்லைப்பற்றியும் திருக்குறளிற்கூறப்படுகிறதா ?' என்று கேட்டனர். 'ஆம், இரண்டு இடங்களிலே கல் வருகிறது.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்"

எனும் திருக்குறள்களைப் பாருங்கள்' எனப் புலவர் கூறினர். பரிகாசமாகக்கேட்டவர் வெட்கித் தலைகுனிந்து திருக்குறளைச் சிறந்த நூலென ஏற்றுக்கொண்டனர் என்பர்.

தமிழிலேயுள்ள சிறந்த நூல்களைத் தொகுத்துக்கூறும் தனி வெண்பாக்கள் யாவும் திருக்குறளை நடுநாயகமாகவைத்தே கூறுகின்றன. வள்ளுவருடைய குறளிலிருந்து சொற்களையும் கருத்துக்களையும் எடுத்தாளாத புலவர்கள் இல்லை எனலாம். திருவள்ளுவமாலை எனும் நூலிலுள்ள வெண்பாக்கள் திருக்குறளைப் பலமுகமாக ஆய்ந்து பார்த்துப் பல சிறந்த விமர்சனங்களைவெளிப்படுத்துகின்றன. இம்மட்டுமா? திருக்குறளை வடமொழிவேதங்களோடு ஒப்பிட்டுக்காட்டி அவற்றிலும்பார்க்கத் திருக்குறளிற் காணப்படும் பல தனிச்சிறப்புக்களைக்கூடப் புலவர்கள் எடுத்துக்கூறியுள்ளனர்.

உலகத்து மக்கள் யாவரும் தாம் இன்பமாக வாழவே விரும்புகின்றனர். துன்பம் நேரிட்டாலும் அதனைச் சகிக்காது அதனை வென்று இன்பமாகவாழும்வழியைத் திருக்குறளைப்போல் இலகுவாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டும் வேறு நூல் ஒன்றுமில்லை

எனல் மிகையாகாது. எந்தக்குடியிற் பிறந்தாலும், எந்தநாட்டில் வாழ்ந்தாலும், எந்தத்தொழிலைச்செய்தாலும் எப்பொழுதும் இன்பமாக வாழும் நெறியையே திருக்குறள் வகுத்துக்காட்டுகிறது.

மனக்கவலையை மாற்றும் மருந்து கடவுட்பத்தியே என அஃது அறுதியிட்டு உரைக்கிறது. மனிதன் மிருகமாக—அசுரனாக—வாழாது, மனிதனாக—அமரனாக—வாழும்வகையை அது காட்டுகிறது; பொறாமை, அழுக்காறு, தீயொழுக்கம், பேராசை, கோபம் முதலிய சமூக அரக்கர்களை வதைக்கும் வழியைப் போதிக்கிறது. குடிகள்கூடி அமைதியாக இன்புடன்வாழும் முறையையும் அவற்றைக்காக்கும் அரசியலின் தன்மைகளையும் அது எடுத்து விளக்குகிறது.

சுயநலமே மக்களை ஆட்டி அலைத்துச் சனசமூகத்தையும் நாடுகளையும் நசுக்கும் பெரிய அணுகுண்டாகும். இந்தச் சுயநலத்தைக் கடிந்து மனிதன் பிறர்நலனுக்காகவே வாழ வழிகாட்டுகிறது திருக்குறள். அதிலுள்ள 1330 திருக்குறள்களில் எதனைப் பார்த்தாலும் சுயநல ஒறுப்பும் பிறர்நல உழைப்புமே தோற்றமளிக்கின்றன. சுயநலத்தை வேரோடறுத்துக் களையவல்லது அன்பெனும் அருமருந்தேயாகும். திருக்குறள் ஒரு பெரிய அன்பூற்று. வள்ளுவர் மக்களுய்ய வகுத்துக்காட்டும் நெறி அன்புநெறியே. அன்பே மக்களுடைய உயிர்நிலை என்பதே அவருடைய வாய்மொழியின் உயிர்நிலை எனல் சாலும். அன்பில்லாதவர்கள் பிணத்துக்குச் சமமானவர்கள் என்பதை வள்ளுவர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு”

“அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன்மரம் தளிர்த்தற்று”

எனுங் குறள்களை நோக்குங்கள். வையகத்தில் வானகவாழ்வு வாழ்வதற்கு—வாழ்வாங்கு வாழ்வதற்கு—நல்லவண்ணம் வாழ்வதற்கு — அன்பு இன்றியமையாதது. இத்தகைய அன்பை

யாவரிடத்தும் காட்டி அன்புவாழ்வு வாழ்வதற்கே மனிதன் பிறந்தான் எனப் பறையறைகிறது திருக்குறள்.

"அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போ டியைந்த தொடர்பு"

என்பது வள்ளுவர்வாக்கு.

பிறர்க்கின்னுசெய்யாமையே—அகிம்சையே—மகாத்மாகாந்தியடிகளுடைய அறநெறியாகும். அகிம்சைக்கு அடிப்படையாயிருப்பது அன்பே. அன்பின்குழந்தையே அகிம்சை எனலும் பொருந்தும். காந்தியடிகளுடைய உயரிய கொள்கைகளும் சீரிய வாழ்வும் வள்ளுவர்வகுத்த அன்புநெறியிலே அமைந்து விளங்குகின்றன. திருக்குறளுக்கு இப்பொழுது இலக்கியமாக விளங்குபவர் அடிகளார் என்பதனை யாவரும் ஏற்றுக்கொள்வர்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

எனுங் குறளில் வள்ளுவர் புலப்படுத்தும் அகிம்சையின் மாண்பைக் கண்டு நாம் அற்புதமடையவேண்டியிருக்கிறது. அன்புக்கும் அகிம்சைக்கும் உரைகல் பகைவர்களேயாவர். பகைவர்களிடத்தும் அன்புசெய்யவேண்டும், அகிம்சையுடன் நடந்துகொள்ளல் வேண்டுமெனத் திருக்குறள் உரைக்கிறது. மகாத்மா காந்தியடிகள் வங்காளத்திலுள்ள நவகாளிப்பகுதியிற் சுற்றுப்பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும்பொழுது அன்பரொருவர் 'என்னைக்கொல்லவரும் ஒருவனை நான் முந்திக்கொல்வதா? அன்றேல் அவனுற் கொல்லப்படுவதா? எது நல்லது?' என்று கேட்டார். அதற்கு மகாத்மா "கொல்லப்படுவதுதான் பெருஞ்செயல்" என்று விடையிறுத்தார். இந்த விடை திருக்குறளில் இருக்கிறதென்பதை அவர் அறியின் மட்டற்ற மகிழ்ச்சிகொள்ளக்கூடும்.

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்பது வள்ளுவர்வாய்மொழி. இச்செயல் பேதையின் அல்லது கோழையின்செயலன்று, சிறந்த பேரறிஞர்செயல் என்பதையும் பின்வருங் குறளில் வள்ளுவர் தெளிவாக எடுத்துக்கூறுகிறார்.

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்"

ஒருவன் தமக்குத் தீமைசெய்தால் அவனைத் தண்டித்தல்வேண்டு மென்றெண்ணுவது சாதாரணமக்கள் இயல்பு. "தன்னைக்கொல்ல வரும் பசுவையும் கொல்" என்பது சாத்திரம் என்றும் அவர்கள் பறையறைவார்கள். ஒருவன்செய்த தீமையைப் பொறுக்கவேண்டு மெனக் கூறுபவர் மிகச்சிலரே. ஆனால் வள்ளுவரோ ஒருவன் செய்த தீமையை உடனே மறந்துவிடவேண்டுமென்றும் அவன் நாணத்தக்கதாகப் பெரிய நன்மையைச்செய்தே அவனைத் தண்டிக்கவேண்டுமென்றும் கூறுவதை அறியும்பொழுது எவ ருடைய உள்ளமும் துள்ளிக்குதிக்குமன்றோ!

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று"

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்பதும் அவருடைய திருவாக்கன்றோ! பிறர் தீமைசெய்தாலும் அவர்களுக்கும் நன்மைசெய்கிறவர்களே பேரறிஞர், இத்தகையரே சான்றோர், உயர்ந்த நாகரிகம்படைத்தோர் என வள்ளுவர் பல குறள்களிற் கூறியிருக்கிறார்.

"அறிவினா னாகுவ துண்டோ? பிறிதின்நோய்
தம்நோய்போற் போற்றாக் கடை?

எனவும்,

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?"

எனவும் சுடச்சுட வினவுகிறார்.

[தொடரும்.]

௧

# தொல்காப்பியத்திற்கண்ட தமிழர்சமயம்

[திருவாளர். சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்.]

தமிழ்நூல்களிற் பழமையுடையது தொல்காப்பியம். அதிற் கூறப்பட்ட தமிழர்களின் சமயம் யாது? என்பதை ஆராய்வோம். தொல்காப்பியத்தால் நாம் மூன்று விஷயங்களை அறியலாம். அவை யாவன:—

(1) தமிழர்களுக்குத் தெய்வநம்பிக்கை உண்டு

(2) வழிபடுகடவுள் உண்டு

(3) இறைவனால் அருளிச்செய்யப்பட்ட முதனூலினிடத்து விசுவாசம் உண்டு.

என்பனவாம். இவை பின்வரும் தொல்காப்பியச் சூத்திரங்களால் நன்கு விளங்கும்.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்"

[இயல்பாகவே வினையினின்றும் நீங்கித் தானே விளங்கிய அறிவினையுடைய கடவுள் உயிர்களுக்கு ஆதிகாலத்திலேயே செய்தது முதனூலாம்]

இச்சூத்திரம், நம் ஆன்றோர்கள்கொண்ட கடவுளிலக்கணத்தையும் அக்கடவுளால் அவர்களுக்கு அருளப்பட்ட முதனூலின் தன்மையையும் நன்கு விளக்குகின்றது. கடவுளிலக்கணத்தை எடுத்துவிளக்குவதில் இச்சூத்திரம் நிகரற்றது. கடவுள் முதற்காரணர்; உயிர்களிடத்து அளவில்லாத இரக்கமுடையவர்; எல்லாமறிபவர்; இயல்பாகவே மலத்தினின்று நீங்கியவர்; விருப்பு வெறுப்பில்லாதவர்; பரிபூரணர்; ஆதியந்தமில்லாதவர்;

உலகத்துக்கு நிமித்தகாரணர். இப்படிக் கடவுளிலக்கணத்தின் பல விதக்கூற்றையும் இச்சூத்திரத்தால் அறியலாம்.

இனி இச்சூத்திரத்திற் குறிக்கப்பட்ட 'முதனூல்' எது? என்பதைத் தொல்காப்பியத்திற் பயிற்சியுள்ளோர் நன்கறிவர்.

"உயர்ந்தோர்க் குரிய ஓத்தினான"

என்பது பொருளதிகாரத்தின் 31-வது சூத்திரம். பொருளதிகாரத்திற் பல இடங்களில் வேதத்தைப்பற்றிக் கூறப்பட்டுளது.

தமிழர்களின் சமுதாயமும் வேதத்தையும் ஸ்மிருதியையும் பேணியதாகத் தெரிகிறது. இதற்குச் சான்றுகள் தொல்காப்பியத்திற் பல வுள.

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்" (பொருளதி. 75)

என்னும் சூத்திரத்தை நோக்குக. இதற்கு உரையாசிரியர் மிக விரிவாகவும் விளக்கமாகவும் உரைகண்டுள்ளார். அவ்வுரையிலிருந்து வேதம், ஸ்மிருதி, இதிகாசம், புராணம் முதலியவற்றிற் கூறப்பட்டுள்ள வேள்விச்செயல்களையும் யோகஇலக்கணங்களையும் அறியலாம். வேதத்தில் விதிக்கப்பட்ட வருணாச்சிரமதருமங்களையும் பல சூத்திரங்கள் குறிப்பிடுகின்றன.

"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே" (பொருளதி. 29)

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமும் உண்டே" (ஷை 144)

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை யந்தணர்க்குரிய" (ஷை 625)

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை" (ஷை 632)

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (ஷை 635)

என்பன காண்க.

வேதவிதிப்படி நிகழும் எண்வகைமணங்கள் "மறையோர் தேஎத்து மன்றலெட்டனுள்" என்ற சூத்திரத்திற் குறிக்கப்பட்டிருப்பது நோக்கற்பாலது.

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என்னும் சூத்திரத்தில் வேதத்துட் கூறப்பட்ட கடவுளர் குறிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது"

[ வேதாந்தவிசாரமாகிய கல்வியை ஏற்றகாலத்திற் பயிலவேண்டும். அக்கல்வி மகாவாக்கியமாகிய தத்துவமசியோடு முரண்படக்கூடாது. ]

என்னும் பொருளதிகாரத்து 188-ஆம் சூத்திரத்துத் 'தத்துவமசி' என்னும் வேதாந்த மஹாவாக்யம் குறிக்கப்பட்டிருப்பது அவதானிக்கற்பாலது.

"நல்லோள் கணவனொடு நளியழற் புகீஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலையும்" (பொருளதி. 79)

என்னும் சூத்திரத்துக் கற்புடைமனைவி தன் கணவனிறந்துழி அவனொடு எரிபுகும்வழக்கம் (சதி) கூறப்பட்டுளது.

இன்னோரன்ன தொல்காப்பியமேற்கோள்களால், தமிழர்களின் சமயம் வைதிகசமயம் என்பது போதரும்.

# இல்லறக்கிழத்திமாண்புகள்

இல்லறக்கிழத்தி என்றது இல்லறத்துக்குரியாளை. இல்லறமெனினும் மனையறமெனினும் ஒக்கும். ஒருவன் தன் மனையிலிருந்து அறஞ்செய்தற்குத் துணையாமுரிமை பூண்டவள் தான் மணஞ்செய்துகொண்டவளேயாதலின் அவள் இல்லறக்கிழத்தி எனப்படுவாள். இல்லிலிருந்து அறஞ்செய்து வாழ்தற்குத் துணையாதலின் அவள் வாழ்க்கைத்துணை எனவும்படுவாள். அவட்குரிய மாண்புகளாவன: நற்குண நற்செய்கைகள். அவைகளையே வள்ளுவரும்,

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்னும் குறளில் மனைத்தக்கமாண்பு என்று சிறப்பித்துக்கூறினர். அம் மாண்பு 'நற்குண நற்செய்கைகள்' என்றும், 'நற்குணங்களாவன: துறந்தார்ப்பேணலும், விருந்தயர்தலும் வறியார்மாட்டருளுடைமையும் முதலாயின' என்றும், 'நற்செய்கைகளாவன: வாழ்க்கைக்குவேண்டும்பொருள்கள் அறிந்து கடைப்பிடித்தலும் அட்டிற்றொழில்வன்மையும் ஒப்புரவுசெய்தலும் முதலாயின' என்றும் அக்குறட்கு உரைகண்ட பரிமேலழகரும் வரைதல் காண்க. இம் மாண்புகளையே தொல்காப்பியர்,

> "கற்பும் காமமும் நற்பா லொழுக்கமும்
> மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும் சுற்ற மோம்பலும்
> பிறவு மன்ன கிழவோண் மாண்புகள்"

என்று எடுத்துக்கூறினர். இம்மாண்புகளை இங்கே விளக்கி, இம்மாண்புகள்யாவும் கோவலன்மனையாளாகிய கண்ணகிபால்

அமைந்து கிடந்தமையை இளங்கோவடிகளாற்செய்யப்பட்ட சிலப்பதிகாரச்செய்யுளினின்றும் எடுத்துக்காட்டலாகும்.

கற்பென்பது ஒருத்தி தான் இல்வாழ்க்கைப்படுமுன் தந்தை தாயரும், இல்வாழ்க்கைப்படும்போது (அஃதாவது கரணமொடு புணருங்காலத்து) ஆசானும், இல்வாழ்க்கைப்பட்டபின் கணவனும் கற்பித்தமுறைப்படி ஒழுகுவது என்றவாறு. அதுவே பொருளாதல்,—தொல்காப்பியர்கூறிய,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

என்னும் சூத்திரவுரையுள் நச்சினார்க்கினியர், "கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுதுகுரவர் (தந்தைதாயர்) கற்பித்தலானும், அந்தணர் திறத்தும் சான்றோர்தேஎத்தும் ஐயர்பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைவன் கற்பித்தலானும் கற்பாயிற்று" என்றும், "இவளை இன்னவாறு பாதுகாப்பாய் எனவும் இவற்கு இன்னவாறு குற்றேவல்செய்தொழுகுவாய் எனவும் (முறையே தலைவனுக்கும் தலைவிக்கும்) ஆசான் கற்பிக்கப்படுதலிற் ... ... கற்பென்றார்" என்றும் கூறுதலானும் அறிந்துகொள்க. கணவன்சொல்லைக் கடவாமல்நடப்பதே கற்பென்னும் பொருள்படக் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று ஔவையாரும் கூறுதல் காண்க. கணவனை வழிபட்டொழுகும் ஒருபெண்ணுக்கு அக்கற்பு யாவரும் மதிக்கும் பெருமையையும் தெய்வஆற்றலையும் கொடுக்கும். திருவள்ளுவரும்,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றும்,

"சோமகுண்டம் சூரியகுண்டத் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநா ளாடுதும்"

என்றுகூற, அவட்குக் கண்ணகி, அது 'பீடன்று' (-குலத்திற் பிறந்தார்க்குப் பெருமையன்று) என்று கூறியதனானே அறியப்படும்.

இனி, மெல்லியற்பொறையும் என்பது, தன் மனத்திலெழுங் காதல் பிரிவுத்துன்பம் முதலியவற்றையெல்லாம் வல்லென்ற நெஞ்சொடுபொறுக்கும் தலைவனைப்போலாது மெல்லென்றநெஞ்சினளாய்ப் பொறுக்கும் பொறையும்* என்றவாறு. மென்மையாகிய இயல்போடுகூடிய பொறை எனினுமாம். பொறுத்தல்-தாங்குதல் (—அடக்கியிருத்தல்). இக்குணம் கண்ணகிபால் விளங்கினமையைத் தன் காதலன் மாதவிபாற் பிரியவும் தான் காதலை அடக்கியிருந்தமையானும், பிரிவுபற்றியதுன்பத்தைப் பிறர்க்குப் புலப்படாது அடக்கியிருந்தமையானும் அறியப்படும். அங்ஙனம் அடக்கியிருந்தாள் என்பதை, இளங்கோவடிகள்,

"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன"

என்னும் அடிகளாற் றெரித்துக்கூறல் காண்க. கண்ணகியின் கருங்கண்கள் கோவலன் பிரிவாலாயதுன்பத்தால் நீரைச்சொரிந்தன. எங்ஙனஞ்சொரிந்தன? எனின், அவளால் தன்னகத்தே பொருந்திய கற்பினாற் காக்கப்படலால் உள்ளிடத்து மறைத்து

---

* மெல்லியற் பொறையும் என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளில் வரும் 'வல்லென்ற நெஞ்சொடு பொறுக்கும் அவனைப் போலாது' என்பது, தொல்-பொருளதிகாரப் பதிப்புக்களுள் ஸ்ரீ. S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பில், 'வல்லென்ற நெஞ்சொடுபொறுக்கும் ஆனையைப்போலாது' என்று காணப்படுகின்றது. ஆண்டுத் தலைவனுக்கும் தலைவிக்குமன்றி ஆனைக்கும் தலைவிக்கும் ஓரியைபுமின்மையின் அப்பாடம் பொருந்துமோ என்பது ஆராய்ந்து கொள்ளத்தக்கது.

நீரைச்சொரிந்தன என்க. கரந்து - ஏதுப்பொருட்டு. அகம் - கண்ணினகம்; இதயம் எனினுமாம். எனவே கோவலன் பிரிவால் கண்ணீர்வரினும், அதனைத் தன் கற்பால் அடக்கிக்கொள்ளுகின்ருள் என்பது கருத்தாம். நச்சினர்க்கினியரும், மேற்காட்டிய சூத்திரவுரையுள், மெல்லியற்பொறையும் நிறையும் என்பவற்றிற்கு உதாரணமாகக் "கடல்பாடவிந்து" என்பது முதலாகவரும், அகநானூற்றுச்செய்யுளையெடுத்துக்காட்டி, அதனுள்வரும் 'கண்ணிறை நீர்கொண்டு கரக்கும்' என்பதற்குக் 'காமமிகுதியாற் கண்தாமே அழவும் கற்பிற் கரக்கும் எனத் தலைவி பொறையும் நிறையும் தோழிகூறியவாறு' என்று கூறுதல் காண்க. வல்லென்ற நெஞ்சொடு பொறுத்தல் என்றதனுல், தனக்குற்ற காதன்முதலியவற்றை ஒரு ஆண்மகன் மெலிதாக அடக்கமுடியாமையால் வாய் திறந்து கூறிவிடுவான் என்பதும் ஒருவாறு அடக்கின் வலிதாகவே அடக்கிக்கொள்வானென்பதும் மெல்லென்ற நெஞ்சினளாய்ப் பொறுத்தல் என்றதனுல், தனக்குற்ற காதன்முதலியவற்றை ஒரு பெண்மகள் வாய்திறந்துகூருள் என்பதும் அடக்கிக்கொள்வாள் என்பதும் பெறப்படும். ஒருபெண்மகள் தனக்குற்ற காதன்முதலியவற்றைத் தன்னுற்காதலிக்கப்பட்ட ஆண்மகனுக்கு வாய்திறந்து கூருள் என்பது, இராமாவதாரத்துச் சூர்ப்பநகைப்படலத்துள், "தாமுறு காமத்தன்மை தாங்களேயுரைப்பதென்ப - தாமெனலாவதன்ருல்" என்று சூர்ப்பநகைகூறுவதாகவருஞ் செய்யுளடிகளானும்,

"நோயலைக் கலங்கிய மதனழி பொழுதிற்
காமஞ் செப்ப லாண்மகற் கமையும்
யானென், பெண்மை தட்ப நுண்ணிதிற் ருங்கி"

என்று தலைவிகூறுவதாக வரும் நற்றிணைச்செய்யுளடிகளானும் (கூச) அறியப்படும்.

இனி, நிறையென்பது மறை பிறரறியாமல் நெஞ்சை நிறுப்பது. அதுமேல், 'நிறைகரந்து' என்று காட்டிய உதாரணத்தானே கண்ணகிபால் விளங்கினமை அறியப்படும்.

இனி, 'வல்லிதின் விருந்துபுறந்தருதலுஞ் சுற்றமோம்பலும் பிறவும்' என்பதும் கணவன் கற்பித்தபடி வல்லவாற்றான் விருந்து புறந்தருதலும் சுற்றமோம்பலும் (தெய்வம்பேணலும் அந்தணர்ப் பேணலும் அட்டிற்றொழில்வன்மையும் முதலாகிய) பிறவும் என்ற வாறு. இவை கண்ணகிபால் விளங்கினமை, மனையறம்படுத்த காதையுள் வரும்,

"மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெற"

என்னும் அடிகளானே அறியப்படும். இன்னும், கொலைக்களக் காதையுள், கண்ணகிகூற்றாகவரும் 'அறவோர்க்களித்தலும் அந்தண ரோம்பலும் - விருந்தெதிர்கோடலும் இழந்த வென்னை' என்னும் அடிகளானும் அறியப்படும்.

மேற்காட்டிய சூத்திரத்துள், 'வல்லிதின் - விருந்துபுறந்தரு தல்' என்றது, குடநீரட்டுண்ணு மத்துணை வறுமைக்காலத்தும் எத்துணைவிருந்தினர்வரினும் தன் கைவன்மையான் அவரை ஓம்புவன்மை. அது,—

"குடநீர் அட்டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்
கடனீர்மை கையாறக் கொள்ளும் மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்" (நாலடி—ந அஉ)

என்னுஞ் செய்யுளான் அறியப்படும்.

இத்துணையும் கூறியவாற்றானே இல்லறக்கிழத்திக்குரிய மாண்புகள் இவையென்பது உணரப்படும்.

சி. கணேசையர்.

# மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு

உயர்திருவாளர் ராவ்ஸாஹிப் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L.

தமிழர்சரிதத்தின் ஆராய்ச்சிவரலாற்றில் எனது நண்பர் இராவ்ஸாஹெப் மு. இராகவையங்காரவர்களது 'சேரன் - செங்குட்டுவன்' தலைமையான ஓர் இடம் பெற்றிருக்கிறது. இந்நூலால் ஆராய்ச்சியுலகில் ஒரு கிளர்ச்சி எழலாயிற்று. சேரரது பண்டைத் தலைநகர் யாது? அவர்களது தாயக்கிரமம் யாது? அவர்கள் ஒரே குடும்பத்தினரா? பல பிரிவினரா? அவர்களது வெற்றி வரலாறு யாது? கடைச்சங்ககாலம் யாது? சிலப்பதிகாரகாலம் யாது? என்பன முதலியன அறிஞர்கள் தெளிதற்குரிய விஷயங்களாயமைந்தன. இந்நூல் 1915-ல் வெளிவந்தது. எனவே, இப்போது முப்பது ஆண்டுகட்குமேல் ஆகிவிட்டன. பல அறிஞர்களும் மேற்கூறியவற்றுள் ஒவ்வொன்றனை யெடுத்து ஆராய்ந்துள்ளனர். ஆனால், ஒருசில தவிர ஏனைய இன்னும் புதிர்களாகவே யுள்ளன. இப்புதிர்களுள் ஒன்று 'மௌரியர் தென்னிந்தியப் படையெடுப்பு'. மீண்டும் இதனைக்குறித்து ஆராயவேண்டும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

முறைப்பட ஆராயுமுன், ஒரு கண்டனவுரையை இங்கே குறிப்பிடாமலிருக்கமுடியாது. காலஞ்சென்ற தஞ்சை ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் 'சேரன்செங்குட்டுவன்' வெளிவந்த சில மாதங்களுக்குள் விரிந்த ஆராய்ச்சியுரையொன்று செந்தமிழில் (1915) வெளியிட்டனர். இவ்வுரை நடுநிலைகுன்றாது சரித்திரவுணர்ச்சியோடு எழுதப்பட்டுள்ளது. மௌரியர் படையெடுப்பைக்குறித்து இதிற் காணும் கண்டனத்திற்கு விடைகூறல் எளிதன்று. எனினும், சிற்சில ஐயப்பாடுகள் தோன்ற இடமுண்டு.

'சேரன் - செங்குட்டுவன்' என்ற நூலை மிகவும் பயன்படுத்தியவர்கள் சரித்திர அறிஞர்களே. இவர்களுள் டாக்டர் கிருஷ்ணஸ்வாமியையங்காரவர்கள் இந்நூலிற்காட்டிய சான்றுகளையே ஆதாரமாகக்கொண்டு, தெற்கே படையெடுத்துவந்தவன் சந்திரகுப்த

மௌரியன் அல்லது பிந்துஸாரனுதல்வேண்டுமென்றும் அப்படையெடுப்பு பொதியமலைவரை எட்டியதென்றும் தென்னிந்திய சரித்திரம் எழுதத்துணிந்தனர் (Beginnings of South Indian History p. 88-103). இந்நிகழ்ச்சிகளின் சமகாலத்தன சங்க இலக்கியங்கள் என்று கொள்ளுதல் பொருத்தமின்று என்பதும், காண்வவம்சத்தினர் வீழ்ச்சிக்கும் ஆந்த்ர ப்ருத்தியர் எழுச்சிக்கும் இடைப்பட்டகாலத்தில் (அதாவது சுமார் கி. மு. 30 க்கும் கி. பி. 200 க்கும் இடையில்) அவை தோன்றியனவாதல்வேண்டும் என்பதும் டாக்டர் ஐயங்காரவர்கள் கருத்தாகும். ஸ்ரீ சத்யநாதையர் இப்படையெடுப்பு பிந்துசாரன்காலத்ததாம் என்பர் (A College Text Book of Indian History vol. I. p. 86).

இனி, மௌரியரைக் குறித்துள்ள சங்கநூற்சான்றுகளைக் கவனிப்போம். புறநானூற்றிலே ஒருசெய்யுளும் அகநானூற்றிலே மூன்றுசெய்யுட்களும் மோரியரைக் குறிப்பிடுகின்றன*. பிற்கூறிய மூன்றனுள், மாமூலனுர் இயற்றியன இரண்டாம். இங்குக் காட்டிய நான்குசெய்யுட்களுள்ளும் புறநானூற்றுச்செய்யுள் ஒன்றற்கே பழையவுரையுள்ளது. அதனை முற்பட உணர்ந்துகொள்வது பெரும்பயன் தருவதாகும். அச்செய்யுள் வருமாறு.

"... ... ... ... வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே"

---

* புறம் - 175 : கள்ளில் ஆத்திரையனுர் — ஆதனுங்கன் (புறம். 389)
அகம் - 69 : உமட்டூர்கிழார் மகனுர் பரங்கொற்றனுர் — ஆதியருமன் (குறுந். 293) நற்றிணை : 367 (நக்கீரர்)
„ 251 : மாமூலனுர் ஆஅய் (contemp) முடமோசி புறம்374, 375
„ 281 : „ — கோசர், மோகூர் : (வம்ப. அகம் - 375; புறம்-79; அகம் 190)

"வென்றிவேலையுடைய விசும்பைத்தோயும் நெடிய குடையினையும் கொடியணிந்த தேரினையுமுடைய நிலமுழுதும் ஆண்ட வேந்தரது திண்ணிய ஆர்சூழ்ந்த சக்கரமியங்குதற்குக் குறைக்கப்பட்ட வெள்ளிமலைக்கு அப்பாலாகிய உலகத்திற்குக் கழியும் இடைகழியாகிய அற்றவாயின்கண் தேவர்களால் நிறுத்தப்பட்டு இருபொழுதும் ஒருபெற்றியே நிலைபெற்றுவிளங்கும் பரந்த இடத்தையுடைய ஆதித்தமண்டிலத்தையொப்ப நாள்தோறும் இரவு பகல் என்னுமல் பலரையும் காத்தலை ஏற்றுக்கொண்டு ஒருபெற்றியே விளங்கிய அறத்துறையாகிய நின்னை" என்பது இதன் பழையவுரை.

இங்கே ஆதித்தமண்டலத்திற்கு ஒப்பாக அறத்துறையாகிய ஆதனுங்கன் கூறப்படுகிறுன். ஆதித்தமண்டலம் இருபொழுதும் ஒருபெற்றியே நிலைபெற்றுவிளங்குகிறது. ஆதனுங்கனும் நாள்தோறும் இரவு பகல் என்னுமல் பலரையும் காத்தலை ஏற்றுக்கொண்டு ஒருபெற்றியே விளங்குகிறுன். புலவர் கூறக்கருதிய உவமம் இதுவே. ஆதித்தமண்டிலம் வெள்ளிமலைக்கப்பாலுள்ள உலகத்திற்கு இடைகழியாகிய அற்றவாயின்கண் தேவர்களால் நிறுத்தப்பட்டதாம். அற்றவாயில்தானும் நிலமுழுதும்ஆண்ட வேந்தரது சக்கரம் இயங்குதற்குக் குறைக்கப்பட்டதாம். நிலமுழுதும்ஆண்ட இவ்வேந்தர் வென்றிவேலையுடையார்; குடையினையும் தேரினையும் உடையார். இவ்வேந்தராவார் சக்கரவாளச் சக்கரவர்த்திகள் என்று உரைகாரர் விளக்குகிறுர்.

இவ்வுரையை நோக்கிய அளவில் இது உண்மை நிகழ்ச்சியான சரித்திரவாலாறன்று என்பது தெளிவாகும். இது ஒரு பௌராணிக வரலாறு (Mythology). இங்கே குறிப்பிட்ட சக்கரம் ஆஞ்ஞா சக்கரமாதல்வேண்டும்; ஏனெனின், தேரின்சக்கரமெனக் கொள்ளுதற்குரிய குறிப்பு யாதும் காணப்படுமாறில்லை.

உரையில் 'நிலமுழுதும் ஆண்டவேந்தர்' எனப் பொருள்தருந் தொடர்க்குரிய மூலம் 'மோரியர்' என்பதாகும். இப்பொருள் இச்சொற்கு எவ்வாறுவந்தது? மூலத்தில் இல்லாததனை வருவித்துக் கூறவேண்டும் அவசியமும் யாதும் காணப்படவில்லை. மோரியர்

என்பது சேரர், சோழர் என்றாற்போலக் குடிப்பெயராயின் உரைகாரர் மோரியர் என்றே கூறியொழிவானன்றி 'நிலமுழுதும் ஆண்ட வேந்தர்' எனச் சொற்பொருள்கூறுவார்போன்று எழுதார். மோரியர் என்பதற்கு இச்சொற்பொருள் அமையுமாறும் இல்லை. இனி, புறநானூற்றின் முதற்பதிப்பில் 'ஓரியர்' என்று மூலத்திற் காணப்படுகின்றது. இதற்கேற்பவே உரையிலும் விளக்கப்பகுதியிலும் ஓரியர் என்றே கொடுக்கப்பட்டுள்ளது. இச்சொல்லிற்கு நிலமுழுதும்ஆண்டவேந்தர் எனச் சொற்பொருள்கொள்ள இடமுண்டா?

வடமொழியில் 'உர்வி' என்ற சொல்லுக்கு 'அகலிடம்' 'இருபேருலகம்' (விண்ணுலகு, மண்ணுலகு) என்ற பொருள்கள் உள்ளன. இதனோடு 'ஈஶ' என்பது சேர்ந்து 'உர்வீஶ' என்று தொடர்மொழியாகி 'இருநிலவேந்தன்' என்று பொருள்படும். 'உர்வீஶ' என்பது ஓரிய என்று திரிந்தது என்று கொள்ளல் தகும். அல்லது 'உர்வீ' என்பதன் தத்திதமாக 'ஔர்விய' 'ஓரிய' எனத் திரிந்தது எனத் துணிதலுமாம். இங்ஙனமாங்கால், 'நிலமுழுதும் ஆண்டவேந்தர்' என்ற பொருள் எளிதிற் பெறப்படுகின்றது. பிறவாறு சொற்பொருள்கூறுதல் ஏலாது. எனவே, 'ஓரியர்' என முதற்பதிப்பிற்கொண்ட பாடமே உண்மையானதெனத் தோன்றுகிறது.

இனி, 'ஓரியராவார் சக்கரவாளசக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரும் என்ப' என்பது விளக்கவுரைப்பகுதி. இப்பெயர்களை நோக்குமிடத்து இவைகள் ஜைனபுராணவரலாறுகளுட் காணப்படல்வேண்டுமென எளிதில் ஊகிக்கத்தகும். சூளாமணி முதலிய காவியங்களைக் கற்றோர் இதிற் சிறிதும் ஐயுறவுகொள்ளார். ஜைனபுராணங்களுள் புறநானூற்றில் காணப்படுவதுபோன்ற வரலாறு எங்கேனும் உளதா?

ர்பரிபஷின் வருஞ் ஸ்ரீபுராணப்பகுதி இங்கே நோக்கத்தக்கது.

"இப்பால் வரதராஜன் திக் விஜயத்திலே ஒருப்பட்டு...அஜிதஞ் ஜயம் என்னும் திவ்யரதம் ஏறி, தவளச்சத்ரம் கவிப்ப...சக்ராத்நம் முன்செல்ல, தண்ட ரத்நங் கைக்கொண்டு ஸேநாபதி மேடுபள்ளம் நிரவி மஹாபதமாக ஸமதலஞ்செய்து முன்செல்ல (பக்-114-5) ...விஜயார்த்திற்குத் தெற்காக ஸ்தபதிரத்நத்தால் நிர்மிக்கப் பட்டுப் பன்னிரண்டுயோஜனை நீளமுள்ள நகரியுள் இருந்தனன். இருந்தவனை ...க்ருதமாலன் என்னும் தேவன் வந்து நமஸ்கரித்து விஜயார்த்த குஹாத்வாரம் திறத்தற்கும் கடத்தற்கும் உபாயத்தை ஸேநாபதிக்குச்சொல்லி சக்ரவர்த்தியை விடைகொண்டுபோயினன். அவன் போயினபின் ஸேநாபதி...தண்டரத்நங் கைக்கொண்டு...... வெள்ளியம்பெருமலையது ஜகதீதலத்தையேறி தமிஸ்ர குஹா முகத்தையடைந்து வடதிசைநோக்கிநின்று தண்டரத்நத்தாலே குஹாத்வார கவாடத்தைத் திறந்தான் (பக். 117—8) * *

அதற்பின், சக்கரவர்த்தி மஹாஸேனையோடுங்கூட....தமிஸ்ர குஹையையடைந்து காகிணீரத்நத்தால் ஒருயோஜனை இடைவிட்டு இருமருங்கும் ஸூர்யமண்டலமும் சந்த்ரமண்டலமும் எழுதி அவற்றின் ஒளிகளால் அங்குள்ள பேரிருளகற்றி......குஹையினுடைய வடதிசைக் கவாடமடைந்து அதனைத் திறந்து......... ம்லேச்சகண்டம் ஜயித்தற்கு வடதிசைநோக்கிப் போயினன்" (பக். 119)

இப்பகுதியில் நெடுங்குடை, தேர், திகிரி (சக்ரம்), அத்திகிரி திரிதரக் குறைத்த அறைவாய், அங்கே நிறுவிய ஆதித்தமண்டிலம் முதலியனவெல்லாம் இருத்தல் நோக்கத்தக்கது. வித்யாதரசக்ரவர்த்திகள் என்பதற்குப் பதில் பரதச்சக்ரவர்த்தி குறிப்பிடப்படுகிறார். எனவே, புறநானூற்றில் வந்துள்ளது போன்ற ஒரு வரலாறு ஜைனபுராணங்களிற் காணப்படுதல்வேண்டும் என்பதற்கு ஓர் அறிகுறியாக இப்பகுதி உதவுகிறது. புறநானூற்றுக்கதைக்குரிய மூலம் இன்னதென வடமொழியிலும் பிராகிருதத்திலுமுள்ள ஜைனநூல்களை ஆராய்ந்தோரே துணியவியலும்.

மேற்கூறியது பொருத்தமாயின், புறநானூற்றில் இச்செய்யுளைப்பாடிய கள்ளில் ஆத்திரையனர் ஒரு ஜைனப்புலவர் என்பது பெறப்படும். வைதிகசமயத்திற்குரிய புராணவரலாற்றை உட்கொண்டு பக்ஷாந்தரமாக உரைகாரர் ஓர் விளக்கம் எழுதியிருத்தலையும் அவ்விளக்கம் செய்யுளின் சொற்கிடக்கையோடு பொருந்தாதொழிதலையும் நோக்குமிடத்து, இச்செய்யுளின் ஆசிரியர் ஜைனர் என்பதில் ஐயுறவுகொள்ள இடமில்லை.

இனி, மோரியரைக் குறிக்கும் அகச்செய்யுட்களில் 69-ஆம் அகப்பாட்டை எடுத்துக்கொள்வோம்.

'விண்பொரு நெடுங்குடை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறையிறந் தகன்றன ராயினும் எனையதூஉம்
நீடலர் வாழி தோழி'

என்பது இச்செய்யுட்பகுதி. ஸ்ரீ ராஜகோபாலையங்கார் பதிப்பில் இச்செய்யுளின் முதலடி இரண்டாஞ்சீர் 'நெடுவரை' என்றுள்ளது பிழை. நெடுங்குடை என்று ஏட்டுப்பிரதிகளிற் காணுவதே உண்மைப்பாடம். மோரியர் என்ற பாடந்தான் என்னிடமுள்ள ஏட்டுப்பிரதியிலும் காணப்படுகிறது. ஆனல், இவ்வடியும் புறநானூற்றடியும் ஒத்திருத்தலை நோக்குமிடத்து 'ஓரியர்' என்பதுதான் பொருத்தமெனத்தோன்றுகிறது. மோரியர் என்பது சரித்திரப் பிரசித்திபெற்றபெயராதலின் ஓரியர்என்ற பாடபேதம் எழுதுவோரால் நேர்ந்த பிழையென்று கருதிப் பதிப்பாசிரியர் அதனைக் காட்டாமல் நீக்கினர்போலும். எங்ஙனமாயினும், இச்செய்யுட்பகுதிக்கும் புறநானூற்றுரைகாரர்கொண்ட பொருளே ஏற்புடையதாகும். உண்மைச்சரித்திரநிகழ்ச்சியைக் கூறுவதாகக்கொள்வதற்கு இச்செய்யுளில் ஆதாரம் யாதும் இல்லை.

இனி, மோரியரை மாமூலனர் குறித்தனரென்று கொள்ளும் இரண்டுசெய்யுட்களுள் முதற்செய்யுளை (அகம் - 251) எடுத்துக்கொள்வோம். ஆராயவேண்டும் பகுதியைக் கீழே தருகின்றேன்.

"நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்
தங்கலர் வாழி தோழி வெல்கொடித்
துனைகா லன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்குவெள் ளருவிய அறைவா யும்பர்
... ... ...
நிரம்பா நீளிடைப் போகி
அரம்போ ழவ்வளை நிலைநெகிழ்த் தோரே."

இதனை நோக்கியவளவில் ஒரு சரித்திரச்செய்தியை உணர்த்துவதாகத் தோன்றுகிறது என்பதனை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. ஆனால், சில ஐயப்பாடுகள் தோன்றுகின்றன.

முதலாவது: கள்ளில் ஆத்திரையனாரும் பரங்கொற்றனாரும் பாடிய செய்யுட்களில் ஜைனநூல்கள் சக்ரரத்நம் என்று கூறும் ஆஞ்ஞாசக்ரம் குறிக்கப்பட்டுள்ளது. மாமூலனார்செய்யுளில் தேர்ச் சக்கரம் (புனைதேர்நேமி) குறிக்கப்பட்டிருக்கிறது. இருவகைச் சக்கரமும் பேரரசின் ஆணைப்பெருமையையே உணர்த்தினும், கதையென்ற அளவில் பிறழ்ச்சிகாணுதல் ஐயுறவை வலியுறுத்துகின்றது.

இரண்டாவது: முற்கூறிய இடங்களில் ஓரியர் அல்லது மோரியர் குறிக்கப்பட்டுள்ளனர்; இங்கே 'வம்பமோரியர்' குறிக்கப்பட்டுள்ளார்கள். வம்பு என்பது 'நிலையின்மை' என்றேனும் 'புதுமை' என்றேனும் பொருள்கொள்ளத்தக்கது. 'வம்பப் பதுக்கை' என்ற புறநானூற்றுத் தொடருக்கு (3) உரைகாரர் 'புதிய' என்றே பொருள் எழுதினர். இப்பொருளை இங்குக் கொள்வதாயின், சந்திரகுப்த மௌரியர் முதலானோர்காலத்துக்குப்பிற்பட்டுப் புதிதாகத்தோன்றி, 'மௌரியர்' என்று தம்மைக் கூறிக்கொண்ட ஓர்வமிசத்தினர் என்று பொருளாய்விடும்.

மூன்றாவது: நந்தனும் மௌரியரும் ஒருங்கே கூறப்படுகின்றனர். 'மோரியரது தேர்செல்லும்படி வெட்டப்பட்ட கணவாய்க்கு அப்பாலுள்ள பாழான பெருவழியிலே சென்ற தலைவர்க்கு அங்கே நந்தனது பெருநிதி கிடைப்பதானாலும் அதன்பொருட்டுத் தங்கமாட்டார்' என்பது இச்செய்யுட்பகுதியின் பொருள். நந்தர்களையழித்துப் பட்டமெய்தியவர்கள் மௌரியர்கள். அந் நந்தர்களுடைய நிதியம் பாடலியிலே கங்கைநீர்க்குக் கீழாகப் புதைத்து வைக்கப்பட்டுள்ளதென இம் மாமூலரே அகம் 265-ல் கூறியுள்ளனர். இந்நிதியம் மௌரியர் தேர்செல்லும்படியமைந்த மலைக்கு அப்பாற்பட்ட நீளிடையிலே கிடைக்க இயலுமென்னும்படி மாமூலர் பாடுவாரா? இது ஊன்றி ஆராயத்தக்கது.

நான்காவது: இவ்வடிகளுக்குப் பொதுவாகக் கூறப்படும் பொருள் மற்றைய இடங்களிலுள்ள வரலாறுகளோடு முரண்படுகிறது. மதுரைக்காஞ்சியில்,

> 'பழையன் மோகூர் அவையகம் விளங்க
> நான்மொழிக் கோசர் தோன்றியன்ன' (508—9)

எனவும்,

> 'பெரும்பெயர் மாறன் தலைவ னாகக்
> கடந்தடு வாய்வாள் இளம்பல் கோசர்' (713—4)

எனவும் வந்துள்ளனவற்றால் கோசர்கள் பழையன்மோகூருக்கு அமைச்சராயும், சேனைவீரர்களாயும் அமைந்தவர் என்பது அறியப்படும். இங்ஙனமிருப்ப, மௌரியரது முன்படையாய்க் கோசர் சென்று பகைமுனையைச் சிதைத்தகாலையில் அவர்க்கு மோகூர் பணிந்து ஒடுங்காததன் காரணமாக மௌரியரே நேரில்வர நேரிட்டது (Beginnings of South Indian History p. 91) என்று மாமூலனார் கூறினாரென்று கொள்ளுதல் மதுரைக்காஞ்சியின் கருத்தோடு முரணுவதாகும்.

ஐந்தாவது: குண்டுநீர்க் கூடலுக்குரியனான அஃதைக்கு (புறம். 347) காப்பாளராகக் கோசர் இருந்தனரென (அகம். 113) நாம் அறிகிறோம். இது பாண்டிநாட்டிற் கோசர் சிலர் வாழ்ந்தனர்

என்று உணர்த்தி, அவர் மோகூருக்கு நண்பராவார் என்பதை வற்புறுத்துகிறது. இதனாலும் மோரியருக்குத் துணையாக இவர் அமைந்தவரென்றல் பொருத்தமின்மை காணலாம்.

ஆறுவது:

'தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி'

என்ற குறுந்தொகைச்செய்யுளால் (15) கோசர் வஞ்சினங்கூறி அம்மொழியை உண்மைப்பட நிறைவேற்றினரென்பது புலனும். எனவே, அவரது வெற்றி அரைகுறைவெற்றியன்று, முழுவெற்றியாகும். இங்ஙிலையில் மோகூர் அவரது பகைவனென்று கொள்ளினும் அவன் பணியாதுநின்றான் என்றல் குறுந்தொகையின் கருத்துக்கு மாறுபட்டதாகும்.

ஏழாவது: மாமூலனாரதுசெய்யுளின் பொருள் ஒருதலையாகத் துணியும்படி விளக்கமுற அமையவில்லை. வம்ப மோரியர்க்கும், கோசர், மோகூர் என்பவர்களுக்கும் எவ்வகையான தொடர்பு என்பது தெளிவாக விளங்கவில்லை.

எட்டாவது: 'வம்ப' என்ற இடத்தில் 'வம்பை' என்பது பிரதிகளிற் காணப்படுகிறது. இஃது உண்மைப்பாடமாயின் ஒருவனுக்குரிய பெயராக இது வழங்கியதாகலாம். ஆனால், இப்பெயர் கொண்டுமுடியுஞ்சொல் புலப்படவில்லை. ஓடி மறைந்துபோயிற்று என நினைப்பதற்கும் இடமுண்டு.

சக்கரங்களைக் குறித்துப் பலவரலாறுகள் முற்காலத்து வழங்கின. அவற்றுள் கீழ்வருவதும் ஒன்று.

"பொய்யா கியரோ பொய்யா கியரோ
பாவடி யானை பரிசிலர்க் கருகாச்
சீர்கெழு நோன்றாள் அகுதைகட் டோன்றிய
பொன்புனை திகிரியிற் பொய்யாகியரோ..." (புறம்-233).

இங்கே 'திகிரியென்றது திகிரி தைத்ததென்று பிறந்த வார்த்தையை' என்றெழுதினர் உரைகாரர். இதுபோன்று மோரியர் அல்லது ஓரியர் திகிரியின்வரலாறென்றும் முற்காலத் துளதாதல் வேண்டும். மேற்கூறியவற்றை ஊன்றிநோக்குமிடத்து இச்செய்யுளைச் சரித்திரச்சான்றாகக் கொள்ளுதல் சிறிதும் ஏற்புடைத்தன்று என்பது புலனும்.

இனி, மாமூலனர் மோரியரைக் குறிப்பிடும் பிறிதொரு செய்யுளைக் கவனிப்போம். அதனுள் நமக்கு வேண்டும் முக்கியமான பகுதி கீழ்வரும் அடிகளே.

"முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்திசை மாதிரம் முன்னிய வரவிற்கு
விண்ணுற ஓங்கிய பனியிருங் குன்றத்து
ஒண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்
பறையறைந் தன்ன அலர்நமக் கொழித்தே" (அகம்—281)

டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலிய சரித்திர ஆசிரியர்கள் வடுகரை மோரியரது தூசிப்படையாகக்கொண்டு அவர்கள் முற்படையாகச் செல்ல மோரியர் படையெடுத்துவந்தனர் எனச் சரித்திரம் அமைப்பர். வடுகர் புல்லி என்பவனது வேங்கடமலைக்கு அப்பாலுள்ள மொழிபெயர்தேஎத்து வாழ்ந்தவர் என்பது,

"புடையலங் கழற்காற் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தன ராயினும்"

என்று மாமூலனர் பாடிய ஓர் அகப்பாட்டினல் (295) விளங்கும். எனவே, இவர்கள் வடகிழக்கில் உள்ளவர்கள். முன்விவகரித்த கோசர்கள் துளுநாட்டில் வாழ்ந்தவர்கள். எனவே, இவர்கள் வடக்கில் உள்ளவர்கள். மோரியர்களது படையெடுப்பில் அவர்களுக்கு வேங்கடத்துக்கருகிலிருந்த வடுகரும் துளுநாட்டிலிருந்த கோசரும் துணைபுரிந்தனர் என்று கூறல்வேண்டும். இது சரித்திரத்திற்கு ஒத்த முடிபாகுமா?

அகம் 281-ல் வரும் 'வடுகர் முன்னுற' என்பதன்பொருள் ஐயமின்றி வரையறுக்கக்கூடியதா? என்று நோக்குவோம். முன்னுற என்பதற்கு (1) எதிர்ப்பட (2) அணுக (3) பொருந்த (4) பின்பற்ற (5) படர்ந்துசெல்ல என்பன முதலிய பலபொருள்கொள்ளுதல்கூடும். தூசிப்படையாக முன்செல்ல என்ற பொருள் வெளிப்படையான சொற்களால் கூறப்படாவிடின் அப்பொருள் கொள்ளத்தக்கதன்று. மேற்காட்டிய பொருள்களுள் எப்பொருள் இம்மாமூலனாரால் கருதப்பட்டதென ஒருவராலும் துணியமுடியாது. வடுகருக்கும் மோரியருக்கும் யாதொருதொடர்புமின்றியே பொருள் கொள்ளுதலும் கூடும். வடுகரை எதிர்ப்படச் சென்றனர் என வினைவயிற்சென்ற தலைவனைக் குறித்ததாகக்கூறல் பிற பொருள்களோடு ஒத்த தகுதிவாய்ந்ததே. இப்பொருளை நாம் கொள்ளின், கள்ளில் ஆத்திரையனாரது புறப்பாட்டுப்போன்று ஓரியரைப்பற்றியகதையாகவே முடியலாம். எனவே, இதுவும் உண்மைச்சரித்திரநிகழ்ச்சியைக் குறிக்கும் சான்றாக ஏற்றுக்கொள்ளுதற்குரியதன்று.

முடிவாக, மோரியரைப்பற்றி வந்துள்ள செய்யுட்கள் நான்கனுள் ஒன்று பழையவுரையுள்ள புறப்பாட்டு; இதன்கண் பண்டைக் காலத்தோர் நம்பிவந்ததோர் கதை தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. பரங்கொற்றனார்செய்யுளும் மாமூலனார்செய்யுளுள் ஒன்றும் (அகம்-281) சரித்திரநிகழ்ச்சியைக் குறிப்பனவாகக் கொள்ளத் தக்கனவல்ல; புறநானூற்றுச் செய்யுட்பொருளையே உட்கொண்டதெனக் கொள்ளுதலவேண்டும். இவற்றுள் வந்துள்ள சரித்திர வகுப்பினராகிய வடுகர் கோசர் என்பவர்களுக்கும் மோரியாது வரவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இம்மூன்று செய்யுட்களிலும் குறிப்பிட்டுள்ள சக்கரத்திற்கும் தேருக்கும் யாதோர் இயைபும் இல்லை. அவை ஆஞ்ஞாசக்கரமென்றே கொள்ளத்தக்கன. இஙனமன்றி, அகம் 251-ஆம் செய்யுளில் தேரின்சக்கரம் தெளிவாகக் கூறப்பட்டிருத்தலோடு கோசர், மோகூர், மோரியர் இவர் தம்முள் சரித்திரத்தொடர்பும் உளதுபோலத் தோன்றுகிறது.

ஆனல், பொருள் விளக்கமில்லாதபடி பலவாருக ஐயுறவுக்கேது வாக இச்செய்யுள் அமைந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு உண்மைச்சரித்திரம் அமைத்தல் பொருந்தாது.

மௌரியர் மைசூருக்குத் தெற்கே படையெடுத்தனர் என்பது ஆராய்ச்சியாளரிற் பெரும்பாலோர் ஒப்புக்கொண்ட விஷயமன்று. சந்திரகுப்த மௌரியன் ஜைனத்துறவியாகித் தென்னடுவந்து மைசூரிலுள்ள சிரவண பெள்குளத்தில் பட்டினிநோன்பினல் உயிர்துறந்தான் என்று ஜைனவரலாறு கூறும். இவ்வரவைப் படையெடுப்பு எனக்கூறுதல் சிறிதும் தகாது. மைசூர்வரை வெற்றியால் மௌரிய அரசாட்சி பரவியிருந்தது என்பதற்கு இது சான்ருகலாம். சந்திரகுப்தனின்மகனுகிய பிந்துஸாரன் படையெடுத்துவந்து தென்னட்டை வென்றுகொண்டான் என்று தாராநாத் கூறுவர். இவர் சுமார் முந்நூறு ஆண்டுகட்குமுன் வாழ்ந்த ஓராசிரியர்; இவர் கூறுவது தக்க சான்ருகாது. காரவேலன் சிலாசாஸனத்தால் பிந்துஸாரனது படையெடுப்பு அறியப்படுகிறது என்பர் ஜெயஸ்வால். இச்சாஸனத்தின்பொருள் நன்குவிளங்க வில்லையென்பது பெரும்பாலோர்கருத்து. அசோகசக்ரவர்த்தி கலிங்கநாடொன்றனையே படையெடுத்துக் கைப்பற்றியவர் என்பது சரித்திரப்பிரசித்தம். இவரது சிலைத்திருவாணைகளும் மைசூர்க்குத் தெற்கில் காணப்பெருதது அந்நாட்டுவரைதான் இவரது ஆட்சி நடைபெற்றிருந்தது என்பதற்கு அறிகுறியாகும். அன்றியும், இவர் சேரசோழபாண்டியர்களைத் தம்மொடு நட்புரிமைபூண்ட தனிமுடி யரசுகள் எனக் குறிப்பிடுகின்றனர். இங்ஙனமிருப்ப, பாண்டியர் சேனபதியான மோகூர் கோசருக்குப் பணியாமையினலே அவருக்குத் துணையாக மோரியர் வந்தனர் என்பது சிறிதும் ஒப்புக்கொள்ளத்தகாததாம்.

மாமூலனர் தம்காலத்துச் சரிதநிகழ்ச்சியைக் குறித்தவருமல்லர். டாக்டர் கிருஷ்ணஸ்வாமிஐயங்கார்முதலினேரும் சமகால நிகழ்ச்சியன்றெனவே கூறினர் (Beginnings of S. I. History p. 100). பழங்கதையொன்று மேற்காட்டிய செய்யுட்களின் அடிகளாற் குறிக்கப்பட்டதெனலே பொருத்தமாகும்.

ஸ்ரீ:

# சோலைமலைக் குறவஞ்சி

[அலங்காரதேவராஜன்]

[இந்நூலாசிரியர் கிருஷ்ணயங்கார் என்பவர். இவரைக் கிருஷ்ணபாரதி யென்று அக்காலத்தில் அழைத்துவந்திருக்கின்றனர். இவரது ஊர் மதுரை ஜில்லாவிலுள்ள ஜம்புவிபுத்தூர். இவர் வைணவர்; பூர்வசிகையினர். இவருடைய தந்தையார் தெய்வப்பெருமாளையங்கார் என்பவர். இவர் ஜம்புவிபுத்தூரிலுள்ள ஸ்ரீ கதலீநரசிங்கப்பெருமாள்சன்னதி அர்ச்சகர்வம்ஸத்தினர். இவையெல்லாம் அக்காலத்தில் மதுரை மிஷின்ஸ்கூல் தலைமையுபாத்தியாயராயிருந்த ஜான் பாலகிருஷ்ணநாயுடு அவர்களியற்றிய சாற்றுக்கவிகளாலும் ஆசிரியர் நூலின்கண் கூறியிருக்கும் மாதாபிதாவணக்கத்தாலும் நன்கு தெரியவருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் வித்வான் ஸ்ரீநிவாஸையங்கார் கூறும் சாற்றுக்கவியிலிருந்து இக்குறவஞ்சிபாடியகாலம் 'விஜய' வருஷம் என்பது கரதலாமலகமாய்த்துலங்குகிறது. ஆகவே இந்நூல் இற்றைக்கு 52-ஆண்டுகட்குமுன் பிறந்தது என்று கொள்ளலாம். கற்றோர்கள் சிலர் இவருக்களித்த சரமகவிகள் சிலவற்றால், சௌமியவருடம் ஆடிமாதத்தில் இவர் மண்ணுலகைநீத்து விண்ணுலகெய்தினர் என்று தெரிகிறது. இக்குறவஞ்சி இதுகாறும் அச்சிடப்படவில்லை. இதன் கைபெழுத்துப்பிரதியொன்று மிகப் பிழைபட்ட நிலையில் எனக்குக் கிடைத்தது. அதிலுள்ளபடி சில செய்யுட்கள் செந்தமிழ்சேபர்படித்து ரசிக்குமாறு இங்கே சேர்க்கப்பட்டுள்ளன.]

## காப்பு

### நேரிசைவெண்பா.

பூமாது மாமணிநூல் பூணுமால் சோலைமலைக்
கோமா னெனநின்ற கொண்டற்குப்—பாமாறன்
செந்தா மரையடிகள் சேவித்துச் செப்புவன்யான்
பந்தாடல் கூர்குறத்திப் பாட்டு.

## குருவணக்கம்

### சந்தவிருத்தம்.

தாள தாமரைகொ ளேரி நீர்நதிபுல் சாரல் சோலைமலை சாருமால்
காள மேகமறை வேடர் பேதைதுதி காதை யீதுவளர் காவலாய்
ஆள ராகியிரு நாலு மாகளிரோ டாரி யர்பரவு மாளியாம்
வாள ராமன்மண வாள மாமுனிவர் வாரி ஜாதபதம் வாழுமே.

### பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வாதுசெ யுஞ்சம ணப்புண ரிக்கொரு வடவா னலமானோன்
வலிமைகொள் பாடண் டக்குல கிரிதகர் மழைபிடி யேறானோன்
பேதுரு மூலகா யுதவிரு ளுக்கொளி பெருகிய கதிரானோன்
பெட்புறு சாக்கிய மதமத மலைநிலை பிரிகே சரியானோன்
சாதுவெ ளும்மை ணவசா சுகமகிழ் தருசல தரமானோன்
சங்கர மத்துவ சித்தாந் தப்பணி தாழ்சுக பதியானோன்
சூதுசெய் மாயைத் தலைமிசை நின்ற துணைத்தா ளெதிராஜன்
சோலை மலைக்குற வஞ்சி விளம்பத் துணைவந் தருள்வானே.

### நித்யசூரிகளைத் துதித்தல்.

பூமகளுறை பூதரமுள பூரணனருள் பூணுமோர்
தூமனமுள சூரிகளடி சூடையின்மிசை சூடியே
பாமகளொடு பாலகனுணர் பான்மையினிது பன்னுவேன்
மாமதிதவழ் மால்விடைமலை மான்மகிழ்குற வஞ்சியே.

### காளமேகவணக்கம்

கொடியகயி டவன்மதுவொ டசுரர்கடல் வடியக்
குடித்திடுங் காளமேகம்
குறைபாத பரமபத நெடுவெளி முகட்டினிற்
குடிகொண்ட காளமேகம்
கோதிலா தொளிர்வயின தேயனு கின்றபொற்
குன்றில்வரு காளமேகம்
கோணமிடை யெங்குமிடை பெரிய திருமேனியைக்
கொண்டிடுங் காளமேகம்

சடையனழி யூழிவெங் கனலினுங் காற்றினுஞ்
சலியாத காளமேகம்
சங்கரைய னுலண்ட முடைபட முழங்கியே
சத்தித்த காளமேகம்
சரபமுயி ரொழியவதி னகலமதி னுகிர்கொடிடி
தந்தவன் காளமேகம்
தாரெனன்று மொழியாது பேரொளிசெய் மின்னைத்
தரித்தகங் காளமேகம்
திடமுநெடு மையுமுடைய தாயென்று மழிவில்வெஞ்
சிலைகொண்ட காளமேகம்
செப்பருந் தவரொனுஞ் சாதகங் களைமகிழ்வு
செய்திடுங் காளமேகம்
சிலைவருட மின்றியிரு விழிகளால் அருள்மாரி
சிந்திடுங் காளமேகம்
செகமடங் கலினுமுள சகலசந் தாபமுந்
தீர்த்திடுங் காளமேகம்

மடமடென வூழிபல பொழியினுந் தனதுநிற
மாறாத காளமேகம்
மலரயன் கயிலையான் ... ... வோடதியை
வருவித்த காளமேகம்
மைம்முகிற் ... ... டெதிரின்றி
வளருமொரு காளமேகம்
மருவுதிரு மோகூரி னுண்டதின் றழகர்குற
வஞ்சியைக் காப்பதாமே.

## அழகரைத் துதித்தல்.

அலைத்தானைக் கடலைமுன்பா லலையானை
யன்பருள்ள மரங்க மாக
நிலைத்தானைத் தன்வூமோர் நிலையானைப்
பகையையெல்லாம் நீற தாகத்

தொலைத்தானைக் கசடர்கட்குத் தொலையானை
பிரணியனைத் துரும்பா யெண்ணி
மலைத்தானைத் தமிழ்ச்சோலை மலையானை
யழகனையே வழுத்து வேனே.

### இப்பிரபந்தம் பிறந்த காரணம்.

பலவுயிரி லரிதுநர செனனமதி லரிதுமறை படிப்பார் சென்மம்
பலமறையோ ரினுமரிது பாகவத மார்க்கமது பற்றி வாழும்
பலவயிண வரினுமரி தரிபதமே பரமென்னும் பத்தி யோகம்
பலர்புரியு மதினுமரி தரிபரவத் துவென்றறியும் பரிசு தானே.

அறிவதுநற் சுருதியுத்தி யனுபவங்க ளாலிருபத் தைந்திற் கூறும்
குறியுளவிச் சிவன்முதற் றத்துவங்க டமையடிமைக் குழுவாய்க் கொண்டு
செறிவுறுமப் பரமான்மா விண்டுவெனப் பெரியோர்நூல் செப்பிற் றென்று
சிறியவற்குத் தெரிவுறவிச் சோலைமலைக் குறவஞ்சி செப்பு வேனால்.

### நூற்பயன்.

கண்ணுதவுங் கருத்துதவுங் கலைபுகலும்
வாக்கியுங் கதிர்முத் தீனும்
மண்ணுதவும் மனையருளும் மக்களுந்தீர்க்
காயுளுடன் வழங்குங் காதற்
பெண்ணுதவுங் குஞ்சரஞ்சூழ் பெருஞ்செல்வ
நல்குழத்தி பெற்று வாழும்
விண்ணுதவுஞ் சோலைமலைக் குறவஞ்சி
நாடகந்தான் விளம்பு வோர்க்கே.

### இப்பிரபந்தத்தை இயற்றச்சொன்னவர்கள்.

திருமலை நம்பி தெய்வ சிகாமணி நம்பி யென்னு
மிருவரு மெம்பி ராற்கோர் குறவஞ்சி யியற்று கென்றென்று
அருமையாய் வேண்டச் சொன்ன தழக்ருக் கனந்தங் கோடி
பெருமைநூற் பெருங்க டற்குள் ளிவைதுளி பேசுங் காலே.

33 பண்டங்கன் வந்து பலிதாவென் றன்பக லோற்கிடென்றேன்
அண்டங் கடந்தவ னன்னமென் றனய னூர்தியென்றேன்
கொண்டிங்கு னையம்பெய் யென்றன் கொடித்தே ரனங்கனென்றேன்
உண்டிங் கமைந்ததென் றனது சொல்ல வுணர்வுற்றதே.

பதவுரை:—பண்டங்கன் - பாண்டரங்கக்கூத்தாடுவோனாகிய சிவபெருமான், வந்து, '(உன்)பலி தா' என்றான் - 'உன்பிச்சையையிடு' என்றான், பகலோற்கு இடென்றேன் - 'சூரியனுக்கு இடு' என்றேன். அண்டம் கடந்தவன் - உலகங்கட்கெல்லாம் அப்பாற்பட்ட (அ)வன், அன்னம் (தா) என்றான் - அன்னம் (கொடு) என்று கேட்டனன், அயனூர்தியென்றேன் - (அது - அன்னம்) பிரமன் வாகனமென்றேன், உன் ஐயம்கொண்டு இங்கு பெய்யென்றான் - உன் பிச்சையை இங்கே கொண்டுவந்து இடு என்றான், கொடித் தேர் அநங்கன் என்றேன் - (ஐயம்பெய்பவன்) கொடியணிந்த தேரையுடைய மன்மதன் என்றேன், இங்கே உண்டு அமைந்தது என்றான் - இவ்விடத்து உணவுட்கொண்டு நிரம்பிற்று என்றான், அது சொல்ல - அவ்வாறு சொல்ல, உணர்வுற்றதே - (துயில் நீங்கி எனக்கு) உணர்வுகூடிற்று.

குறிப்புரை:—அது சொல்ல உணர்வுற்றதென்றமையான் இதுவரையும் கனவில் நிகழ்ந்தமை காட்டியவாறு. இது கனவினிலையுரைத்தல். (உன்) பலிதா? என்பதற்கு (உன்பல் இதா?) உன்னுடைய பல் இதுவா? என்றும், அன்னம் என்பதற்கு அயனூர்தி (-பிரமன்வாகனம்) என்றும், 'கொண்டிங்குனையம்பெய்' (கொண்டு இங்கு உன் ஐ அம்பு எய்) என்பதற்குக் கையிற் கொண்டு உன் ஐங்கணைகளை எய் என்றும் சிலேடைவகையால் வேறொரு பொருள்தோன்றக் கூறினமை காண்க. ஐங்கணையாவன: முல்லை, அசோகு, மா, தாமரை, நீலம் என்பன. அயன் (-விஷ்ணுவிடத்திற்பிறந்தவன்) வடமொழிச்சிதைவு. அன்னம் என்றதும் அது.

34 உற்றடி யாருல காளவோ நுணு முறக்குமின்றிப்
பெற்றம தாவதென் றேறும் பிரான்பெரு வேனெடுங்கட்
சிற்றடி யாய்வெண்பற் செவ்வா யிவள்சிர மாலைக்கென்றும்
இற்றிடை யாம்படி யாகவென் னுக்கு மெலிகின்றதே.

பதவுரை:—பெருவேல் நெடுங்கட் சிற்றடியாய்!—பெரிய வேல்போலும் நீண்டகண்ணையும் சிறிய அடியையும் உடையாளே!, வெண்பற் செவ்வாய் இவள் - வெண்மையாகிய பல்லையும் செம்மையாகிய வாயையும் உடையவளாகிய இவள், அடிபார் உலகு உற்று ஆள - அடிபார் உலகினையடைந்து

ஆண்டு வர, ஓர் ஊனும் உறக்கும் இன்றி - சிறிதும் ஊனுறக்கம் இல்லாமல், ஆவது என்று பெற்றம் ஏறும் பிரான் - பொருந்துவதென்று விடையேறிப் பவனிவரும் சிவபிரானது, சிரமாலைக்கு - தலைமாலையின்பொருட்டு, இடையாம்படியாக இற்று - இடைபோல நைந்து, என்றும் என்னுக்கு மெலிகின்றது - எக்காலத்தும் ஏன் மெலிகின்றனள்.

குறிப்புரை:—என் வினாப்பெயர். பெற்றம் திசைச்சொல். அது பகுதிப் பொருள்விகுதி.

35 மெலிக்கின்ற வெந்தீ வெயில்வா யிழுதழல் வாய்மெழுகு
கலிக்கின்ற காமங் கரதல மெல்லி துறக்கும்வெங்கூற்
றொலிக்கின்ற நீருறு தீயொளி யார்முக்க ணத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றை சூடிய பல்லுயிரே.

பதவுரை:—ஒலிக்கின்ற நீர் உறு தீயொளியார் - ஒலிக்காநின்ற நீர் பொருந்திய தீயினது ஒளியையுடையார், முக்கண் அத்தர் - மூன்றுகண்களையுடைய இறைவர், மிக்க பலிக்கென்று வந்தார் - மிகுந்த பிச்சையை வேண்டி இரக்கவந்தார், (அதனால்) கலிக்கின்ற காமம் - எழுகின்ற காமமானது, கரதலம் - அவருடைய கையிலுள்ள, மெலிக்கின்ற வெந்தீ - வருத்துகின்ற கொடிய நெருப்புப்போல் என்னை வருத்துவதாயிற்று;(அதனால் யான்) வெயில்வாய் இழுது - வெய்யிலின்கட்பட்ட வெண்ணெயும், அழல்வாய் மெழுகு - தீயிலிட்டமெழுகும் (ஆயினேன்), எல்லி - இரவானது, துறக்கும் வெங்கூற்று-(என் உயிரைப்) போக்கும் கொடிய எமனுயிராநின்றது. (யான் இவ்வாறு வருந்தவும் உலகம் வருந்தாதிருக்கின்றது. அதற்குக்காரணம், உலகம்), கடிக்கொன்றைசூடியவே? - அவ்விறைவருடைய மணம்மிக்க கொன்றைமாலையை(ப்பெற்று)ச் சூடிக்கொண்டனவோ?.

குறிப்புரை:—தலைவியின் வருத்தமிகுதி கூறியது.

36 பல்லுயிர் பாக முடறலை தோல்பக லோன்மறல்பெண்
வில்லியோர் வேதியன் வேழ நிரையே பறித்துதைத்துப்
புல்லியுஞ் சுட்டு மறுத்து முரித்துங்கொண் டான்புகழே
சொல்லியும் பாடியு மேத்தக் கெடுநங்கள் சூழ்துயரே.

பதவுரை:—நிரையே - முறைப்பட, பகலோன்பல் பறித்தும் - சூரியனதுபல்லைத் தகர்த்தும், மறல் உயிர் உதைத்தும் - கூற்றுவனுயிரை (அவனை) யுதைத்தும், பெண் பாகம் புல்லியும் - பெண்ணை இடப்பாகத்தில் அடைந்தும்,

வில்லியுடல் சுட்டும் - மன்மதனுடலைச் சுட்டெரித்தும், ஓர் வேதியன் தலை அறுத்தும் - ஒப்பற்ற பிரமன்சிரமொன்றைக் கொய்தும், வேழம் தோல் உரித்தும் - யானையைத் தோலையுரித்தும், கொண்டான் புகழே - (வெற்றி) கொண்ட இறைவன்புகழ்களையே, சொல்லியும் பாடியும் ஏத்த - கூறியும் பாடியும்பரவ, நங்கள் சூழ்துயர் கெடும்-நம்மைப் பீடிக்கும் துன்பம் நீங்கும்.

குறிப்புரை:—ஓர் வேதியன் - ஒப்பற்ற அந்தணன், என்றது பிரமனை. வில்லியென்றது கரும்புவில்லையுடைய காமனை. நிரையே என்புழி ஏகாரம் ஏழாவதன்பொருட்கண்வந்தது; 'உள்ளடைவே' என்புழி இவ்வாறே விரிப்பர் சிவஞானமுனிவரும். பகலோன் என்றது பகன் என்னுஞ் சூரியனை. மறல் - ஆகுபெயர். புகழே என்புழி ஏகாரம் பிரிநிலை. இது நிரனிறை. பறித்தும், உதைத்தும், புல்லியும், சுட்டும், அறுத்தும், உரித்தும் கொண்டான் புகழே சொல்லியும் பாடியும் ஏத்த, நம்துயர் கெடும் என வினை முடிக்க. தவத்தான் மனத்துயராயினாரையும் வெல்லும் வில்லையுடையவனாகலின் வில்லி என்றும், பெண்பிறந்தாரில் இறைவியையொப்பாரின்மையின் பெண்ணென்றும் கூறினர்.

37 துயருந் தொழுமழுஞ் சோருந் துகிலுங் கலையுஞ்செல்லப்
பெயரும் பிதற்று நகும்வெய் துயிர்க்கும் பெரும்பிணிகூர்ந்
தயரு மமர்விக்கு மூரி நிமிர்க்குமந் தோவிங்ஙனே
மயரு மறைக்காட் டிறைக்காட் டகப்பட்ட வாணுதலே.

பதவுரை:—மறைக்காட்டு இறைக்கு ஆள் தகப்பட்ட வாள் நுதல் - வேதாரணியேசுரருக்கு ஆளாந்தன்மை தகுதியாகவுற்ற ஒளிபொருந்திய நெற்றியையுடைய மாது, துயரும் துயரப்படுவாள், தொழும் - வணங்குவாள், அழும் - அழுவாள், துகிலும் கலையும் செல்லச் சோரும் - ஆடையும் மேகலையும் வீழ்ந்துபோகச் சோர்வாள், பெயரும் - பெயர்ந்துசெல்வாள், பிதற்றும் - பிதற்றுவாள், நகும் - சிரிப்பாள், வெய்துயிர்க்கும் - பெருமூச்செறிவாள், பெரும்பிணிகூர்ந்து அயரும் - பெருநோய்மிகுந்து அயர்வாள், அமர்விக்கும்- பொருந்துவிக்கச்செய்வாள், மூரிநிமிர்க்கும் - மூரிநிமிர்வாள், அந்தோ இங்ஙனே மயரும் - ஐயோ! இவ்வாறே மயங்கிநிற்பாள்.

குறிப்புரை:—வாணுதல் அன்மொழித்தொகை. அந்தோ இரக்கக் குறிப்பு. இது பாங்கி சிறைப்புறமாகத் தலைவிதுயர்கிளத்தல்.

38 வாணுதற் கெண்ணநன் றன்று வளர்சடை யெந்தைவந்தால்
நாணுதற் கெண்ணுள் பலிகொடு சென்று நகுநயந்து
பேணுதற் கெண்ணும் பிரமன் திருமா லவர்க்கரிய
தாணுவுக் கென்னே யிராப்பக லைந்திவ டாழ்கின்றதே.

பதவுரை:—வாணுதற்கு - ஒளியுள்ள நெற்றியையுடைய தலைவிக்கு, எண்ணம் நன்றன்று - எண்ணம் நல்லதன்று, வளர்சடை - வளர்கின்றசடையையுடைய, எந்தை வந்தால் - இறைவன் வந்தால், நாணுதற்கு எண்ணுள் - வெட்கமடையாளாய், பலிகொடுசென்று நகும் - பிச்சையைக்கொண்டுசென்று சிரிப்பாள், நயந்து பேணுதற்கு எண்ணும் - விரும்பிப் பேணநினைவாள், பிரமன் திருமாலவர்க்கு அரிய தாணுவுக்கு-பிரம விஷ்ணுக்களாற் காண்டற்கரிய சிவபிரான்திறத்து, இராப்பகல் நைந்து இவள் தாழ்கின்றது என்? - இரவும் பகலும் இவள் வருந்திநிற்கின்றது எதனால்.

குறிப்புரை:—இது, பாங்கி வருந்தல். இறைவன், பிரமன் மாலறியாப் பெற்றியனாகலின் அவனைநோக்கி வருந்தலாற் பயனில்லையென்பார், 'பிரமன் திருமாலவர்க்கரிய தாணுவுக்கு இரவும் பகலும் நைந்து இவள் தாழ்கின்றது என்' என்றார்; 'பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க' என்பது திருவாசகம். தாணு - அசைவில்லாதவன்; ஸ்தாணு என்பதன் சிதைவு; 'தாணுவே சிவனே சங்கரா' என்பது திருவிசைப்பா.

39 தாழுஞ் சடைசடை மேலது கங்கையக் கங்கைநங்கை
வாழுஞ் சடைசடை மேலது திங்களத் திங்கட்பிள்ளை
போழுஞ் சடைசடை மேலது பொங்கர வவ்வரவம்
வாழுஞ் சடைசடை மேலது கொன்றையெம் மாமுனிக்கே.

பதவுரை:—எம் மா முனிக்கு - சிறந்த முனிவனாகிய எம் இறைவனுக்கு, சடை தாழும் - சடை தாழ்ந்திருக்கும், சடைமேலது கங்கை - அச்சடையின் மேற் கங்கை தங்கியிருக்கும், அக்கங்கைநங்கை சடைவாழும் - அந்தக் கங்கையாகிய நங்கை அச்சடையின்கண் என்றும் நீங்காது மகிழ்ந்து வாழ்வள், சடைமேலது திங்கள் - அச்சடையின்மேல் திங்கள் இருக்கும். அத்திங்கட்பிள்ளை சடைபோழும்- அவ்விளம்பிறை சடையினைப் பிளந்துசெல்லும், சடைமேலது பொங்கரவு - அச்சடையின்மேல் சீறுகின்ற பாம்பு தங்கியிருக்கும், அவ்வரவம் சடைவாழும் - அப்பாம்பு அச்சடையினை நீங்காது வாழும். சடைமேலது கொன்றை - அச்சடையின்மேல் கொன்றைமாலை சூட்டப்பட்டிருக்கும்.

குறிப்புரை:— இறைவன் முற்றத்துறந்தார்வடிவங்கொண்டெய்தலின் 'எம்மாமுனி' என்றார். 'பிள்ளை' என்றது இளமைகுறித்துநின்றது. 'கங்கை யாள்' என்ற வழக்குநோக்கித் 'திங்கட்பிள்ளை' என்றார். "வளர்சடைமே விளமதியம் தோன்றும் தோன்றும்", "கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்", "துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்பும் தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்" என்னும் தேவார அடிகள் இங்கே நோக்கத்தகும்.

40 முனியே முருகலர் கொன்றையி னாயென்னை மூப்பொழித்த
கனியே கழலடி யல்லாற் களைகண்மற் றென்றுமிலேன்
இனியே லிருந்தவஞ் செய்யேன் றிருந்தவஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கட மார்க்கினிச் சாற்றுவனே.

பதவுரை:— முனியே - முனிவனாகிய இறைவனே !, முருகு அலர் கொன்றையினாய் - மணம் விரிந்த கொன்றைமாலையையுடையாய் !, என்னை மூப்பு ஒழித்த கனியே - என்னை முதுமையைப்போக்கி (வாழ்வித்த) கனி போல்வானே!, அஞ்சே திருந்த நினைந்து ஏல் இருந்தவம் செய்யேன்-(யான்) பஞ்சாக்கரத்தையே நன்றாக எண்ணிப் பொருந்திய பெரிய தவத்தை இயற்றேன் (ஆதலால்), தனியேன்படுகின்ற சங்கடம் இனி ஆர்க்குச் சாற்றுவன் - கதியற்ற யான் படுகின்ற) துன்பத்தை இனி எவரிடம் கூறுவேன் ? களைகண்(உனது) கழலடியே - (யான்படுகின்ற துன்பத்தைப் போக்கிக் காக்கும்) ஆதாரம் உனது வீரக்கழலணிந்த அடிகளேயாகும், அல்லால் - அவ்வடிகளையன்றி, (களைகண்) மற்றொன்றும் இலேன் - (ஆதாரம்) வேறொன்றும் இல்லாதவனாயினேன்.

குறிப்புரை:—அஞ்சு - தொகைக்குறிப்பாய் ஈண்டுப் பஞ்சாக்கரத்தை யுணர்த்திநின்றது. ஏ பிரிநிலை. ஏல் என்பதற்கு, 'வரிப்புனைபந்தொடு பாவைதூங்க' என்புழிப்போல 'இசைந்து' என்று பொருள்கூறலும் அமையும். தனியேன் என்பது துணையிலாதேன் என்பதுகுறித்துநின்றது. களைகண் - ஆதாரம், 'மற்றோர்களைகணில்லேன்' என்பது அப்பர்தேவாரம். உம்மை இழிவுசிறப்பு. சங்கடமார்க்கினிச் சாற்றுவன்: "யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன்" என்பது திருவாசகம். 'அத்தா என்னிடர் ஆர்க்கெடுத்துரைக்கேன்' என்பது சுந்தரர்தேவாரம்.

41 சாற்றுவன் கோயிற் றலையும் மனமுந் தவமிவற்றல்
ஆற்றுவ னன்பெனு நெய்சொரிந் தாற்றியஞ் சொன்மலரால்
ஏற்றுவ னீசன்வந் தென்மனத் தானென் றெழுந்தலரே
தூற்றுவன் றோத்திர மாயின வேயினிச் சொல்லுவனே.

பதவுரை:—தலையும் மனமும் கோயில் சாற்றுவன் - (என்னுடைய தலையையும் மனத்தினையும் கோயிலாகக்கொண்டு (அதில் இறைவனை) நிறைவிப்பேன், இவற்றல் - தலையும் மனமும் (வாக்கும் ஆகிய) இவற்றினல், தவம் ஆற்றுவன் - தவத்தைச்செய்வேன், ஆற்றி - (தவத்தைச்) செய்து, அம் சொல் மலரால் - அழகிய சொல்லாகிய பூவோடு, அன்பெனும் நெய் சொரிந்து - அன்பாகிய நெய்யினைப் பெய்து, ஏற்றுவன் - (மனத்தின்கண் ஞானவிளக்கினை) ஏற்றுவேன், (ஏற்றி), ஈசன் வந்து என் மனத்தான் என்று - இறைவன் என் நெஞ்சில்வந்து குடிகொண்டானென்று, எழுந்து - கிளர்ந்து, அலர் தூற்றுவன் - (என்) மகிழ்ச்சியை (எங்கும்) பரப்புவேன். இனி-மேல், தோத்திர மாயினவே சொல்லுவன்-(இறைவன்) தோத்திரமாயினவற்றையேசொல்லுவேன்.

குறிப்புரை:—அன்பினை நெய்யாக உருவகஞ்செய்தார். சாற்றுவன் முதலியவற்றுள் அன்விகுதி தன்மையொருமையின் கண்ணது; 'இலனென்னு மெவ்வமுரையாமை' என்புழிப்போல. சொன்மலர்: 'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்' என்ருர் பெரியாரும்.

42 சொல்லா தனகொழு நாவல்ல சோதியுட் சோதிதன்பேர்
செல்லாச் செவிமரந் தேறித் தொழாதகை மண்டிணிந்த
கல்லா நினையா மனம்வணங் காத்தலை யும்பொறையாம்
அல்லா வவயவந் தானு மனிதர்க் கசேதனமே.

பதவுரை:—சோதியுட்சோதிதன்பேர் - சோதியிற்சிறந்தசோதியாகிய இறைவன்திருநாமத்தை, சொல்லாதன - சொல்லாதவை, நா அல்ல - நாக்கள்ல, கொழு - வெறுந்தசையாம், செல்லாச் செவி மரம் - அந்நாமம் புகாத காதுகள் மரத்தொளையாம், தேறித்தொழாதகை மண் - தெளிந்து (இறைவனை) வணங்காத கைகள் மண்ணும், நினையாமனம் - எண்ணுத நெஞ்சம், திணிந்தகல்லாம் - கடினமான கல்லாகும், வணங்காத் தலையும் பொறையாம் - வணங்காத தலைகளும் சுமையாகும், அல்லா அவயவந்தானும் - இவையொழிந்த பிற உறுப்புக்களும், மனிதர்க்கு அசேதனம் - மக்களுக்குப் பயனற்ற பொருள்களாம்.

குறிப்புரை:—விளக்கமனைத்தினுஞ் சிறந்த விளக்கமாதலின் 'சோதியுட்சோதி' என்றாரென்க. இப்பெற்றிநோக்கியே 'சோதியே சுடரே சூழொளி விளக்கே' என்றதும். அசேதனமென்றது சடப்பொருளென்பது பற்றி. 'திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகில்' என்னும் அப்பர் திருத்தாண்டகமும் திருவங்கமாலையும் இங்கு நோக்கத்தகும்.

43 தனக்குன்ற மாவையஞ் சங்கரன் றன்னரு ளின்றிப்பெற்றன்
மனக்கேன்று நஞ்சிற் கடையா நினைவன் மதுவிரியும்
புனக்கோன்றை யானரு ளாற்புழு வாகிப் பிறந்திடினும்
எனக் கேன்றும் வானவர் போன்னுல கோடோக்க வேண்ணுவனே.

பதவுரை:-சங்கரன் தன் அருளின்றி-சிவனது திருவருளானன்றி, வையம் - உலகின்கண், தனம் குன்றமாப் பெற்றால் - பொருள் குன்றமென்ன அடைந்தாலும், மனக்கு - மனத்தில், என்றும் - எக்காலத்தும், நஞ்சிற் கடையா நினைவன் - (அப்பொருளினை) விடத்தினுங் கீழாக நினைப்பேன், மது விரியும் - தேன்மிக்க, புனக்கொன்றையான் - புனத்தின்கண் உள்ள கொன்றைப்பூவைச்சூடிய சிவபிரானது, அருளால் - கருணையினால், புழுவாகிப் பிறந்திடினும் - புழுவாகிப் பிறந்தாலும், (அப்பிறப்பு), எனக்கு - என் விஷயத்தில் என்றும் - எக்காலத்திலும், பொன்னுலகு - பொன்மயமாகிய தேவலோகத்திலுள்ள, வானவரோடு ஒக்க எண்ணுவன் - தேவர்களுடைய பிறப்போடு ஒருதன்மைத்தாக எண்ணுவேன்.

குறிப்புரை:—'தனக்குன்ற' மென்றது எதுகைநோக்கித் திரிந்தது. மனக்கு என்பதனை 'மாடக்கு' என்பதுபோலக் கொள்க. சிவனருளாற் பெறாதசெல்வமாகலின் 'நஞ்சிற்கடையா நினைவ' னென்றும், அவனருளாற் பெற்ற புழுப்பிறவி மிகச்சிறந்ததாகலின், 'புழுவாகிப்பிறந்திடினும் பொன்னுலக வானவரோடொக்க எண்ணுவன்' என்றும் கூறினார். இவ்வாறு கூறுதலை, 'உள்ளம் பெரியரல்லாச் சிறுமானிட ருற்ற செல்வம், கள்ளம் பெரிய சிறுமனத்தார்க்கு' என்றும், 'புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா வுன்னடியென்மனத்தே வழுவா திருக்க வரந்தரவேண்டும்' என்றும் பெரியோர் பணித்தமையானும் அறியலாம். 'பிறந்திடினும்' என்புழி உம்மை இழிவு சிறப்பு. 'நஞ்சின்' என்புழி இன் உறழ்பொருஉ.

44 எண்ண மிறையே பிழைக்குங்கோ லாமிமை யோரிறைஞ்சுந்
தண்ணளம் பிறைச்சடைச் சங்கரன் சங்கக் குழையன்வந்தேன்
உண்ணனன் குறைவ தறிந்து மொளிமா நிறங்கவர்வான்
கண்ணு முறங்கா திராப்பக லெய்கின்ற காமனுக்கே.

பதவுரை:—இமையோர் இறைஞ்சும் - தேவர்கள் வணங்குகின்ற, தண் அம் பிறைச்சடைச் சங்கரன் - குளிர்ந்த பிறைச்சந்திரனைத்தரித்த சடையை யுடைய சங்கரனென்னும் திருநாமத்தையுடையவனும், சங்கக்குழையன் - சங்கக்குண்டலத்தையுடையவனுமாகிய இறைவன், வந்து - என்னை நெருங்கி, உள் - (என்)மனத்தில், நன்கு உறைவது அறிந்தும் - நன்றாக வசிப்பது கண்டிருந்தும், ஒளிமா நிறம கவர்வான்-ஒளிபொருந்திய மாநிறத்தைக்கவர, இராப்பகல் - இரவும் பகலும், எய்கின்ற காமனுக்கு - அம்பினைவிடுகின்ற மன்மதனுக்கு, கண்ணும் உறங்காது - கண்ணும் துயிலாது, எண்ணம் இறையே பிழைக்குங்கொல் - கருத்துச் சிறிதே தவறுமோ?

குறிப்புரை:-இது தலைவிவருந்தல். 'ஒளிமாநிறம்' என்பதற்கு வேறுரைப் பாடும் உள. சங்கரன் - சுகஞ்செய்பவன்; ''சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கலால், நலமில னாடொறு நல்குவானலன், குலமிலராயினுங் குலத்துக்கேற்ப தோர், நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே'' என்னும் தேவாரத்தாற் காண்க.

45 காமனை முன்செற்ற தென்றா ளவளிவள் காலனென்னும்
தாமநன் மார்பனை முன்செற்ற தென்றுதன் கையெறிந்தாள்
நாமுனஞ் செற்றதன் றாரையென் றேற்கிரு வர்க்குமஞ்சி
ஆமெனக் கிற்றில ரன்றெனக் கிற்றில ரந்தணரே!

பதவுரை:—அவள் (இறைவன்) காமனைச்செற்றது முன் என்றாள் - அவள் இறைவன் காமனையெரித்தது முன் என்று கூறினாளாக, இவள் (இறைவன்) முன்செற்றது காலனென்னும் தாம நன்மார்பனை என்று தன் கையெறிந்தாள் - இவள் இறைவன் முன்னே யழித்தது யமனென்றுகூறப் படும் மாலையணிந்த மார்பினையுடையானையென்று தன்கையறைந்துகூறினாள், அன்று-அப்போது, நாம் முனம்செற்றது ஆரை? என்றேற்கு-நீர் முன்னே அழித்தது எவரை? என்ற எனக்கு, அந்தணர் - அழகிய தண்ணளியுடைய ராகிய இறைவர், இருவர்க்கும் அஞ்சி - அவ்விருவர்க்கும் பயந்து, ஆமெனக் கிற்றிலர் அன்றெனக்கிற்றிலர் - ஆமென்றுங்கூறிலர் அன்றென்றுங்கூறிலர்.

குறிப்புரை:—இது மூவர்கூற்று; ஒருத்தி இறைவன் காமனை முன்னே அழித்தனன் என, வேறொருத்தி இறைவன் காலனை முன்னே அழித்தனன் என, வேறொருத்தி இவ்விரண்டுசெயலுள் எது முன் நிகழ்ந்தது? என இறைவனை வினவுதலின். நாமென்னும் உளப்பாட்டுத்தன்மை முன்னிலைக்கண் வந்தது; இதனை, ''நாமரையாமத்தென்னோ வந்துவைகி நயந்ததுவே'' என்புழி 'நாம்' என்பதற்குப் பேராசிரியர்கூறுதலால் அறியலாம். தாம நன்மார்பு - ஒளியையுடைய மார்பு எனினும் ஆம்.